# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.33/2023** **நாள் : 11.05.2023**

<u>அடையாறு மண்டலத்திற்குட்பட்ட காந்தி நகர் முதலாவது பிரதான சாலையில்
கழிவுநீர் உந்துகுழாய் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால்
12.05.2023 அன்று காலை 8 மணி முதல் 13.05.2023 அன்று காலை 8 மணி வரை
பசுமை வழிச்சாலையில் அமைந்துள்ள அடையாறு கழிவுநீர் உந்துநிலையம் செயல்படாது</u>

## <u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

அடையாறு மண்டலத்திற்குட்பட்ட காந்தி நகர் முதலாவது பிரதான சாலையில் தற்போதுள்ள 1050 மி.மீ விட்டமுள்ள கழிவுநீர் உந்துகுழாயில் புதிதாக பதிக்கப்பட்ட 1000 மி.மீ விட்டமுள்ள கழிவுநீர் உந்துகுழாயினை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 12.05.2023 அன்று காலை 8 மணி முதல் 13.05.2023 அன்று காலை 8 மணி வரை பசுமை வழிச்சாலையில் அமைந்துள்ள அடையாறு கழிவுநீர் உந்துநிலையம் செயல்படாது.

எனவே, மண்டலம்-9 மற்றும் 13-க்குட்பட்ட இடங்களில் உள்ள இயந்திர நுழைவாயில்களில் கழிவுநீர் நிரம்பி வெளியேறும் நிலை எற்பட்டால் அவசரத் தேவைகளுக்காக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை வெளியேற்ற கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பகுதிப் பொறியாளர் – 9 (தேனாம்பேட்டை) | கைபேசி எண்.8144930909 | ஐஸ் ஹவுஸ், மைலாப்பூர், மந்தைவெளி |
| பகுதிப் பொறியாளர் -13 (அடையாறு) | கைபேசி எண்.8144930913 | அடையாறு, ராஜா அண்ணாமலைபுரம் |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்